அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.
முதன்மைக் கல்வி அலுவலா் மற்றும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் அவா்களின் செயல்முறைகள்
முன்னிலை: முனைவா்.நா.அருள்முருகன் **M.A., M.Ed., M.Phil., Ph.D.,**

ந.க.எண். 41/2013/RMSA நாள் : 24.03.2014

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA)- 9ஆம் வகுப்பில் கற்றலின் பின்தங்கிய மாணவா்களுக்கு மூன்று மாதங்கள் நடைபெற்று வரும் இணைப்புப் பயிற்சி – பின்னறி தோ்வு (Post test) நடத்துதல் சாா்பு.

பாா்வை : 1) மாநிலத் திட்ட இயக்குநா் (RMSA) அவா்களின் செயல்முறைகள் ந.க.எண. 1610/அ2/அகஇகதி/2013/நாள்.13.11.2013.
2) மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் (RMSA) புதுக்கோட்டை அவா்களின் செயல் முறைகள் ந.க.எண்.41/2013/நாள் 18.11.2013
3) மாநிலத் திட்ட இயக்குநா் (RMSA) அவா்களின் செயல்முறைகள் ந.எண்.1610/அ2/அஇகதி 2013/நாள்.19.3.2014.

** ** ** **

பாா்வை 1ல் கண்டுள்ள செயல்முறைகளைப் பின்பற்றி பாா்வை 2ல் உள்ள செயல்முறைகளில் மாவட்டத்தின் 208 மையங்களில் 9 ஆம் வகுப்பில் கற்றலில் பின்தங்கிய மாணவா்களுக்கு இணைப்புப்பயிற்சி நடத்திட வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அவ் இணைப்புப் பயிற்சியில் ஒரு முன்னறி தோ்வு நடத்தப்பட்டுள்ளது. பாா்வை 3ன்படி அம் மாணவா்களுக்கு தற்போது பின்னறி தோ்வினை நடத்திட கீழ்கண்ட வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1) இணைப்புப் பயிற்சி மாணவா்களுக்கான பின்னறி தோ்வு 28.03.2014 அன்று நடத்தப்படவேண்டும்.
2) பின்னறி தோ்வு விடைத்தாட்களை மதிப்பீடு செய்து மாணவா்கள் முன்னறி மற்றும் பின்னறி தோ்வுகளில் பெற்ற மதிப்பெண் பட்டியல்களை மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் அலுவலகத்துக்கு உடன் அனுப்பிடல் வேண்டும்.
3) இணைப்புப் பயிற்சி மாணவா்கள் பின்னறி தோ்வில் பெற்ற மதிப்பெண்களை அவா்கள் மூன்றாம் பருவத்தோ்வில் பெற்ற மதிப்பெண்களாகக் கருதி அவா்களுக்கு தோ்ச்சி வழங்கவும் பரிசீலிக்கலாம்.

ஆகவே அனைத்து தலைமையாசிரியா்களும் **28.03.2014** அன்று முன்னறி தோ்வினை நடத்தி மதிப்பெண்பட்டியலை விடைத்தாட்களுடன் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஆணை வழங்கலாகிறது.

குறிப்பு :
1) **பின்னறி தோ்வு வினாத்தாட்களை RMSA அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்**
2) **பின்னறி தோ்வு தொடா்பான அனைத்துச் செயல்பாடுகளும் (பின்னறி தோ்வு வினாத் தாட்களைப் பெறுதல், தோ்வினை நடத்துதல், விடைத்தாட்களை மதிப்பிடுதல், மதிப்பெண்பட்டியலுடன் விடைத்தாட்களை RMSA அலுவலகத்தில் ஒப்படைத்தல்) கல்வித் தன்னாா்வலா் மூலமே செய்யப்படவேண்டும்**

(ஒப்பம்) முனைவா்.நா.அருள்முருகன்,
முதன்மைக் கல்வி அலுவலா் மற்றும்
மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் (**RMSA**),
புதுக்கோட்டை.

24/3/2014.
ADPC (RMSA)
PUDUKKOTTAI

பெறுநா்.
தலைமையாசிரியா்கள்
அனைத்து அரசு உயா்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல்
1) மாநிலத் திட்ட இயக்குநா் (RMSA) அவா்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்டக் கல்வி அலுவலா் புதுக்கோட்டை/அறந்தாங்கி அவா்களுக்கு தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.